# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1855/19 - 2014 මාර්තු මස 25 වැනි අඟහරුවාදා - 2014.03.25

*1855/19 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்தி சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய என்னால், 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதிய ஆணைச்சீட்டின் மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதிந்த எவரேனும் ஆட்கள் சுயவிருப்பமின்றி வதிவிடங்களில் இருந்து அகற்றிக் கொண்டு செல்லப்பட்டார்களா அல்லது காணாமற்போயுள்ளார்களா என்பதை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன் அவ்வாறு சுயவிருப்பமின்றி வதிவிடங்களிலிருந்து அகற்றிக் கொண்டு செல்லப்பட்டதாக அல்லது காணாமற் போயுள்ளதாக கருதப்படும் காலப்பகுதியானது 1983, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2009, மே மாதம் 19 ஆந் திகதிவரை எனத் திருத்தப்பட வேண்டுமென இனம் காணப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன், மேற்சொன்ன விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டிய காலம் 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதியென நீடிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

உங்கள் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு, மேலே சொல்லப்பட்ட சனாதிபதி ஆணைச்சீட்டின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவில் காட்டப்பட்டுள்ள கருமங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இத்தால் நான் உங்களைப் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு மாச்சு மாதம் இருபத்தோராம் திகதியாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.




இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.